18.01.2024

O.S.No.29/2014

வா.சா2.திரு.பார்த்தசாரதி த.பெ.சங்கரன் பிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. எனது தந்தை பூர்வீகம் மறவன்குளம் என்றால் சரியல்ல. எனது தந்தையின் பூர்வீகம் தேவகோட்டைஅருகே உள்ள யமனேஸ்வரம் என்ற ஊராகும். எனது தாய், தந்தையர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் கருப்பையா தாவா சொத்தில் பூர்வீகமாக குடியிருந்து வந்தார் என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, அவர் குடியிருக்கவில்லை. நான் 2011ம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுமார் 70 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார் என்றாலும், நான் தாவா சொத்தை கிரையம் வாங்கும் முன்பே அந்த சொத்தில் அவர்கள் குடியிருந்து வந்ததால் அந்த விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் தாவாசொத்தை கிரையம் வாங்கும் முன்பு பிரதிவாதிகள் தான் குடியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அங்கு யாருமே குடியிருக்க வில்லை.

2. தாவா சொத்து ஆதியில் சீனிராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சீனிராவுத்தருக்கு சுலைகா பிவி என்ற வாரிசு இருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு சீனிராவுத்தரும் தெரியாது, சுலைகாபிவியும் தெரியாது. சுலைகாபிவி, அரபுஷாராவுத்தர் என்பவருக்கு திருமணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுலைகாபிவி மற்றும் அரபுஷாராவுத்தர் இருவரும் உயிருடன் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி சுலைகாபிவிக்கும், அரபுஷாராவுத்தருக்கும் மொத்தம் 7 வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். சுலைகாபிவிக்கும், அரபுஷாராவுத்தருக்கும் பிறந்தவர்கள் அப்பாஸ், தாசின், பகுருதின், கமருதின் இவர்கள் தான் எனக்கு தெரியும், மற்றவர்கள் எனக்கு தெரியாது. மேற்படி 7 வாரிசுகளுக்கிடையே அவர்களது பெற்றோர்களின் சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

3. நான் இந்த வழக்கில் மேற்படி பாகபிரிவினை பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி பெயருக்கு தாவா சொத்தை ரசிதா பேகம் என்பவர் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ரசிதா பேகத்திற்கு தாவா சொத்து எவ்வாறு கிடைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ரசிதா பேகத்தின் கொழுந்தனார்கள் கமருதின் உட்பட சிலர் எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் ரசிதாபேகத்திற்கு சொத்து பாத்தியம். எனது மனைவி தாவா சொத்தை கிரையம் வாங்கிய போது சொத்தை அளந்து அத்துமால் காட்டப்பட்டதா என்றால் இல்லை. தாவாசொத்திற்கு ரசிதா பேகம் பேரில் இருந்த பட்டா எதுவும் என்னிடம் கொடுத்தாரா என்றால் ரசிதா பேகம் பட்டாவை கொடுத்தார், அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரசிதா

பேகத்திற்கு தாவா சொத்தை எழுதி வைத்தவர் அவரது கணவர் பகுருதின் என்ற சங்கதியை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு ரசிதா பேகம் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்ற சங்கதியையும் நான் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. அதே போல் தாவா சொத்திற்கு கமருதின், பக்ருதின், அப்துல்சமத் ஆகியோர்களது பெயரிலும் பட்டா இருந்தது இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. 1988ம் ஆண்டு ஒரு பத்திரம் ஏற்பட்டதாவும், அந்த பத்திரத்தில் தாவா சொத்து "இ" செட்டியுலாக காட்டப்பட்டுள்ளதாக ரசிதா பேகம் கிரையம் பெற்ற ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றாலும், 1988ம் ஆண்டு பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். 1988ம் ஆண்டு பத்திரத்திற்கு முன்பு அதன் தாய் பத்திரமாக 1986ம் ஆண்டு வெண்ணிலை பத்திரம் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி 1986ம் ஆண்டு வெண்ணிலை பத்திரம்தான் வா.சா.ஆ-3 என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 05.09.1986ம் ஆண்டு எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றாலும், அந்த பத்திரம் 03.12.1986ம் ஆண்டு அரபுஷாராவுத்தர் பெயரில் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. மேற்படி வா.சா.ஆ-3 ஆவணம் எழுதப்பட்ட அன்று தாசில்தின் வெளிநாட்டில் இருந்ததாகவும், அவர் அதில் கையொப்பம் இடவில்லை எனவும் கூறி, தாசில்தின் என்பவரின் மனைவி சிக்கந்தர் பிவி என்பவர் மதுரை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து, அதன் பேரில் கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு நானும், ரசிதாபேகமும் ஆஜர் ஆகி இருந்தோம் என்றால் தாசில்தின்னுக்கும், எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று நாங்கள் காவல் நிலையத்தில் தெரிவித்து விட்டோம். எனது மனைவி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழையக்கூடாது என வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் முந்தைய வரலாறு எதுவும் தெரியாமல், தாவா சொத்தில் குடியிருக்கும் பிரதிவாதிகளை வெளியேற்றும் நோக்கில் பொய்யான சங்கதிகளை கொண்டு, வாதி இந்த பிராதை தாக்கல் செய்து வாதி எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் உரிமை கோரி மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.275/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எதுவும் தெரியாமல் பிரதிவாதிகளை பற்றி அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி எனது மனைவி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான், பிரதிவாதிகளை பற்றி அவதூறான வார்த்தைகளை உபயோகப்படுத்தி எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி இருப்பதால் அது குறித்து பிரதிவாதிகள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளார்கள் என்றால் அவர்கள் பிச்சை எடுத்தது உண்மை என்பதால்தான் நான் அந்த வார்த்தையை உபயோகித்தேன். நான் தாவா சொத்து குறித்து பொய்யாக

சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து ஓட்டுவாடம் என எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.